**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**வலங்கைமான்,**

**முன்னிலை:- திரு. P. ஜேசுபாலன், M.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், வலங்கைமான்
2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ம் நாள் செவ்வாய்க்கிழமை

**வழக்கிடை மனு எண். 28/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 22/2020**

*****

சின்னப்பிள்ளை .... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிர் /

சுப்பிரமணியன் ..... எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்கு 03.02.2025-ஆம் தேதியன்று வரப்பெற்று மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. N.K. சண்முகம், M.A., B.L., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. B. மகேஸ்வரன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்டறிந்தும், இருதரப்பு ஆவணங்களை பார்வையிட்டும், இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையிலிருந்து, இன்று (22.04.2025) இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும் ....

**// உத்தரவு //**

மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் கடந்த 26.02.2024 ம் தேதியில் வா.சா.1 ன் சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்யாமல் Close செய்த காரணத்தால் மேற்படி வா.சா.1 ன் சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்ய ஏதுவாக Recall செய்வதற்கு உத்தரவு வழங்கிட வேண்டி வகுமுறை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 உரிமையியல் நடைமுறைச்சட்டத்தின் கீழ் மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2, மனுதாரர்/பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம் :-**

மனுதாரர் இந்த வழக்கில் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர்/ வாதி, மனுதாரர்/ பிரதிவாதிக்கு எதிராக சொத்து சுவாதீனப் பரிகாரமும், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் முதல் விசாரணை முடிந்து, கடந்த 26.02.2024ம் தேதியில் மனுதாரர் தரப்பில் நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை என்ற காரணத்தால் வழக்கில் எதிர்மனுதாரர்/வாதியை குறுக்கு விசாரணை செய்யாமல் வா.சா.1ன் சாட்சியத்தை Close செய்து வழக்கானது எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தொடர் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டுள்ளதாகவும், மனுதாரர், கடந்த 20.02.2024ம் தேதியிலிருந்து தொடர்ந்து 10 நாட்களுக்கு மேலாக உடல் நலம் பாதிக்கப்பட்டு அவரால் எழுந்து நடமாட இயலாத வண்ணம் படுத்த படுக்கையாக சிகிச்சை பெற்று வந்ததாகவும், அதனால் கடந்த 26.02.2024ம் தேதியன்று நீதிமன்றத்தில் மனுதாரரால் நேரில் ஆஜராக இயலவில்லை என்றும், மனுதாரர் அவரது வழக்கறிஞரை சந்தித்து வழக்கு குறித்த விபரங்களை தெரிவித்து குறுக்கு விசாரணை செய்யவும் இயலவில்லை என்றும், மனுதாரர், வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ கடந்த 26.02.2024ம் தேதியன்று நீதிமன்றம் வருகை தராமல் இருக்கவில்லை என்றும், மனுதாரரை மீறிய உடல்நல குறைப்பாட்டால் அன்றயை தினம் நீதிமன்றத்திற்கு வருகை தர இயலவில்லை என்றும், கடந்த 26.02.2024ம் தேதியில் வா.சா.1ன் சாட்சியத்தை குறுக்கு விசாரணை செய்யாமல் Close செய்துள்ள காரணத்தால் மேற்படி வா.சா.1 ன் சாட்சியத்தை மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் குறுக்கு

விசாரணை செய்ய வேண்டியது நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும் இல்லாவிடில், மனுதாரருக்கு சொல்ல முடியாத கஷ்டமும், நஷ்டமும், ஏற்படும் என்றும், எனவே, வா.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஏதுவாக Recall செய்ய அனுமதி வழங்குமாறு உத்தரவு வழங்கிட வேண்டி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்த எதிருரை</u> :-

மனுதாரரின் மனுவானது சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், மனு வனையப்பட்ட விதம் சரியானதல்ல என்றும், வாதியை குறுக்கு விசாரணை செய்ய கூறியுள்ள சங்கதிகள் ஏற்புடைய சங்கதிகள் அல்ல என்றும், மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளும் கற்பனையாக சொல்லப்பட்ட சங்கதிகளாகும் என்றும், அவைகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார் என்றும், வழக்கை காலதாமதம் செய்யும் பொருட்டு மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரருக்கு உடல்நிலை பாதிக்கப்பட்ட படுத்தபடுக்கையாக சிகிச்சை பெற்று வந்ததாக கூறுவதற்கு ஆதாரவாக எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யாததால் மனு தள்ளுபடி செய்ய வேண்டியதாக உள்ளது என்றும், மனு நல்ல எண்ணத்தில் கொடுக்கப்படவில்லை என்றும், வயது முதிர்ந்த இந்த வாதியை வீணாக அலைக்கழித்து அவருக்கு கஷ்டத்தை ஏற்படுத்த வேண்டமென்ற கெட்ட எண்ணத்தில் கொடுக்கப்பட்ட மனுவாகும் என்றும், வாதியை குறுக்கு விசாரணை செய்ய Recall செய்ய கொடுக்கப்பட்ட இம்மனுவை

ஏற்றுக்கொண்டால் எதிர்மனுதாரர்/வாதிக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும், அநீதியும் ஏற்படும் என்றும், எனவே, சமூகம் நீதிமன்றம் இந்த மனுவை இந்த எதிர்மனுதாரர்/வாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் இந்நீதிமன்றம் தீர்மானிப்பது என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மேற்கண்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததிலிருந்து வாதியை விசாரித்து குறுக்கு விசாரணை செய்ய கடந்த 26.02.2024ம் தேதியன்று வாய்தா போப்பட்டிருந்த நிலையில், கடந்த 20.02.2024ம் தேதியிலிருந்து தொடர்ந்து 10 நாட்களுக்கு மேலாக உடல் நலம் பாதிக்கப்பட்டு மனுதாரரால் எழுந்து நடமாட இயலாத வண்ணம் படுத்த படுக்கையாக சிகிச்சை பெற்று வந்ததாகவும், அதனால் கடந்த 26.02.2024ம் தேதியன்று நீதிமன்றத்தில் மனுதாரரால் நேரில் ஆஜராக இயலவில்லை என்பதால் வா.சா.1 ஐ மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய காலதாமதம் ஆகிவிட்டது என்று மனுதாரர் தரப்பில் கூறுப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் அதற்கு ஆதரவாக மனுதாரர் தரப்பில் எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று வாதிடப்பட்டது. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் அவரது கட்சியை நிரூபணம் செய்வதற்கு வாய்ப்பு வழங்க வேண்டியது நீதியின் பால் அவசியமாகும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ஐ மனுதாரர் தரப்பில் குறுக்கு

விசாரணை செய்ய ஏதுவாக Recall செய்வதற்கு அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்யப்படுகிறது.

**6) முடிவாக**, மனுதாரர்/ பிரதிவாதி மனு செலவுத் தொகையாக ரூ.1,000/−த்தை எதிர்மனுதாரர்/வாதிக்கு .04.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், செலுத்த தவறும்பட்சத்தில் மனு தானாகவே தள்ளுபடி ஆகி விடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

**அழைக்க வாய்தா .04.2025.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22−ஆம் நாளில் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.04.22 16:07:43 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.

1. மனுதாரர் தரப்பு சாட்சி :− − இல்லை

2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் − − இல்லை

3. எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி :− − இல்லை

4. எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் − − இல்லை

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.04.22 16:07:50 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், வலங்கைமான்.